# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2015 - 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 4

சுட்டெண்:............................................................ நேரம்: 120 மணித்துளிகள்

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள் ________________.

   (216, 247, 12)

2. யாழிசைப்போர் ________________ என அழைக்கப்பட்டனர்.

   (விறலியர், பாணர், கூத்தர்)

3. முக்கனிகளும் முழுப்பயன் தரும் காலம் ________________ த் திங்கள்.

   (ஆவணி, ஆடி, வைகாசி)

4. எத்தனை வகையான பூக்கள். இவை ________________ எவ்வளவு அழகானது!

   (அவற்றுள், இவற்றுள், ஒவ்வொன்றும்)

5. நாம் தமிழ்ப் பண்பாட்டை வாழ்வில் ________________ வேண்டும்.

   (வெறுக்க, நீக்க, பேண)

6. **பழமொழி :-**

   தன் ________________ கொண்டு அம்பலம் ஏற வேண்டும்.

   (பழம், பலம், பளம்)

7. அறநூல்களில் சிறந்தது ________________ .

   (திருக்குறள், சிலப்பதிகாரம், புறநானூறு)

8. கூலங்களில் ஒன்று ________________ .

(பலா, வாழை, நெல்)

9. தமிழருடைய பண்பாட்டில் ________________ சிறந்த இடம் வகித்தது.

(முரசு, உடுக்கு, தப்பட்டை)

10. தொன்மை என்றால் ________________ .

(மிகஇனிமை, மிகப்பழைமை, மிகப்புதுமை)

11. இராவணனது கொடியில் உள்ள முத்திரை________________ .

(வீணை, யாழ், முரசு )

12. நான் அம்மாவுக்குப் பிடித்த ________________ ப் பாடுவேன்.

(கதையை, நடனத்தை, பாடலை)

13. சிறுவர்கள் நேற்று விளையாட்டுத்திடலில் ________________ .

(விளையாடுகின்றனர், விளையாடுவர், விளையாடினர்)

14. ஆடுவோருடைய துள்ளலோடு பொருந்தும் தாளமாகக் ________________ அமைகிறது.

(சிலம்படி, காவடி, கோலடி)

15. வடநாட்டு மன்னர்களான ________________ தமிழர் வீரத்தை இகழ்ந்து பேசினர்.

(சேரனும்சோழனும், கனகனும்விசயனும், பாண்டியனும்சோழனும்)

16. ________________ விரைந்து உதவுபவனே உண்மை நண்பன்.

(புகழில், இன்பத்தில், துன்பத்தில்)

17. சிங்கத்தை அழிக்கத் திட்டம்போட்ட விலங்கு

________________ .

(முயல், நரி, ஓநாய்)

18. உலகின் நல்அமைதிக்கும் நல்வாழ்வுக்கும்

இன்றியமையாதது ________________ .

(குடும்பம், பணம், பொருள்)

19. புல்லிதழ் இருப்பது ________________ .

(நெல்லுக்கு, பூவுக்கு, நீருக்கு)

20. சிற்றுண்டிகளில் ஒன்று ________________ .

(பிட்டு, வடை, சோறு)

21. ***நொடி*** :-

வெட்டினால் வெட்டுப்படார்; கட்டினால் கட்டுப்படார்;

விட்டுப் பிரியமாட்டார்; கிட்டவே வருவார். அவர் ________________

(நிழல், தண்ணீர், நாக்கு)

22. **கல்வி கரையில கற்பவர் நாள்சில.....** எனத் தொடங்கும்

பாடல் இடம் பெற்றுள்ள நூல்________________ .

(மூதுரை, நாலடியார், நல்வழி)

23. **ஒலிவட்டு:-**

தமிழருடைய புத்தாண்டு நாள் ________________ .

(ஆடிப்பிறப்பு, வாணிவிழா, தைப்பொங்கல்)

24. முக்கனிகளில் ஒன்று ________________ .

(பலா, கொய்யா, நெல்லி)

25. ***குறள் :-***

தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்துஒன்றும்

________________ தீவினைப் பால்

(துன்னற்க, என்னற்க, தன்னற்க)

26. தோண்டத் தோண்ட ஊறுவது ________________ .

(கேணி, கடல், ஆறு)

27. போர்முரசைப் ________________ என்றும் அழைப்பர்.

(மணமுரசு, படைமுரசு, கொடைமுரசு)

28. குயிலியின் பட்டுப்பாவாடை ________________ என்று மின்னியது.

(பளபள, மளமள, கலகல)

29. ஆடிப்பிறப்பன்று ________________ ஆடிக்கூழ் காய்ச்சிக் குடிப்போம்.

(காலையில், மாலையில், இரவில்)

30. விழாக்கள் மூலம் ________________ வளர்த்துக் கொள்ளலாம்.

(பகைமையை, ஒற்றுமையை, வேற்றுமையை)

புள்ளிகள் 30

**2) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| கலகல | இன்பதுன்பம் | மேடும்பள்ளமும் |
|---|---|---|
| மெல்லமெல்ல | வண்ணவண்ண | |

1. காற்று ________________ வீசத் தொடங்குகிறது.

2. பூங்காவில் ________________ ப் பூக்கள் பூத்திருக்கின்றன .

3. சிறுமி ________________ என்று சிரித்தாள்.

4. ஒருவரது வாழ்வில்________________ இரண்டும் வருவது

   இயல்பு.

5. நாம் சென்ற பாதையில் ________________ காணப்பட்டன.

புள்ளிகள் 05

**3) பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. புலவர்கள் தமிழைத் தீந்தமிழ் செந்தமிழ் என்று

   __________________________ .

2. முன்னாளில் அரச கட்டளைகளை மக்களுக்கு அறிவிக்கப்

   பறை __________________________ .

3. நாம் ஒருவர் செய்த நன்றியை மறக்கக்

   __________________________ .

4. பாட்டி குழந்தையை அன்பாகக் கட்டி

   __________________________ .

5. திராவிட மொழிகள் தமிழை மூலமொழியாகக்

   __________________________ .

புள்ளிகள் 10

**4) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

அறிவழகி ஓர் ஆற்றின் பாலத்தின் வழியாக நடந்து பள்ளிக்குச் சென்றாள். செல்லும் வழியில் இருபக்கமும் பச்சைப்பசேல் என நெல்வயல்கள் காணப்பட்டன. நெற்கதிர்கள் காற்றில் அழகாக அசைந்தன. அருகே இருக்கும் பூங்காவில் நறுமணம் வீசும் பூக்கள் பூத்துக் குலுங்கின. மல்லிகை வெள்ளை நிறத்தில் பூத்திருந்தது. அப்பூக்கள் மனதிற்கு மகிழ்வைத் தந்தன. பல வண்ணங்களையுடைய வண்ணத்துப்பூச்சிகள் பூக்களில் தேன் குடித்துக் கொண்டிருந்தன. அவை தம் வண்ணவண்ணச் சிறகுகளை மெல்லமெல்ல அசைத்தன. அக்காட்சி பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது. அறிவழகி அதைப்பார்த்து மகிழ்ந்தபடி சென்றாள்.

1. அறிவழகி எதன் வழியால் நடந்து சென்றாள்?

______________________________________________

______________________________________________

2. செல்லும் வழியில் இருபக்கமும் எவை காணப்பட்டன?

______________________________________________

______________________________________________

3. எவை காற்றில் அழகாக அசைந்தன?

______________________________________________

______________________________________________

4. வெள்ளை நிறத்தில் பூத்திருந்தது எது?

______________________________________________

______________________________________________

5. பூக்களில் தேன் குடித்துக் கொண்டிருந்தவை எவை?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

5) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| இசை | கோவலன் | சிலப்பதிகாரம் |
| முத்தமிழும் | தமிழருடைய | |

மிகச்சிறந்த இலக்கியங்கள் தமிழில் உள்ளன. அவற்றுள் ஐம்பெருங்காப்பியங்கள் பெருஞ் சிறப்புடையன. ________________ ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகும். அது இளங்கோவடிகளால் எழுதப்பட்டது. அது ________________ வாழ்க்கை வரலாற்றையும் பண்பாட்டையும் கூறுகிறது. சிலப்பதிகாரம், கண்ணகி, மாதவி ________________ ஆகியோரின் கதையைக் கூறுகிறது. அக்காப்பியத்தில் இயல் ________________ நாடகம் என்னும் ________________ விரவி உள்ளது. ஆகையால் அது முத்தமிழ்க்காப்பியம் எனவும் அழைக்கப்படும்.

புள்ளிகள் 10

6) **கீழே தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிடமொழியில் எழுதுக.**

1. ஒவியம் ________________
2. சிற்றுந்து ________________
3. விலங்கு ________________
4. தொலைக்காட்சி ________________
5. திராட்சை ________________

புள்ளிகள் 05

**7) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள சொல்லியமாக்குக.**

1. உடையார் / இகழ்ச்சி / அடையார் / முயற்சி

_______________________________________________ .

2. எழுதினான் / இளந்திரையன் / அஞ்சல் / வன்னியாவுக்கு

_______________________________________________ .

3. சிறப்பும் / பறை / உடையது / தொன்மையும்

_______________________________________________ .

4. போட்டார் / அழகாகக் / அம்மா / கோலம் / முற்றத்தில்

_______________________________________________ .

5. சுற்றிப் / வண்டுகள் / பூக்களைச் / பறக்கின்றன

_______________________________________________ .

புள்ளிகள் 05

8) **பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.**

1. தமிழுக்கு மட்டும் உரிய சிறப்பு எழுத்து எது?

___________________________________________

___________________________________________

2. வைகறை என்றால் என்ன?

___________________________________________

___________________________________________

3. திருமண விழாக்களில் முழங்கும் முழவு எது?

___________________________________________

___________________________________________

4. காட்டில் செருக்குடன் வாழ்ந்த விலங்கு எது?

___________________________________________

___________________________________________

5. இலக்கண நூல்களில் முதன்மையானது எது?

___________________________________________

___________________________________________

புள்ளிகள் 10

9. தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதுக.



புள்ளிகள் 15